O.S. No: 170/2018

பெயர் :மோகனசுந்தரம்

**வா.சா.1**

12-09-2024

**குறுக்கு விசாரணை**

வாதி கார்த்திகேயன் என் சகோதரர் . நாங்கள் 4 சகோதரர்கள். ஒரு இறந்துவிட்டார். இன்னொரு சகோதரர் பெயர் ரமேஷ் . கார்த்திகேயன் விவசாயம், ஆட்டோ மொபைல்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ் விற்கும் தொழில் செய்து வருகிறார். நான் சிட் பண்ட் மற்றும் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். ரமேஷ் விவசாயம் செய்து வருகிறார் . கார்த்திகேயனுடைய வரவு செலவு கணக்குகள் எனக்கு ஓரளவு தெரியும். கார்த்திகேயன் வருமான வரி செலுத்தி வருகிறார். எத்தனை வருடமாக செலுத்தி வருகிறார் என்று அவருக்கு தான் தெரியும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் . நான் சுமார் 15 வருடங்களாக செலுத்தி வருகிறேன். நான் 2005 இல் இருந்து செலுத்தி வருகிறேன். ரமேஷ் வருமான வரி செலுத்தி வருகிறாரா என்று அவருக்கு தான் தெரியும். நாங்கள் அனைவரும் தனித்தனி குடும்பமாக தான் வசித்து வருகிறோம். கார்த்திகேயன் இடையில் 3, 4 வருடங்களுக்கு முன்பு உடல் நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் . தற்பொழுது சரியாகிவிட்டார். சம்சாத் பேகத்தை கார்த்திகேயனுக்கு எப்படி தெரியும் என்றால் அவரது கணவர் முகமது ஆரிப் மூலம் தெரியும். கார்த்திகேயனுக்கு முகமது ஆரிப்பை கடந்த 20 ஆண்டுகளாக தெரியும். எனக்கு முகமது ஆரிப்பை கடந்த 20 வருடங்களாக தெரியும். சாதாரண பழக்கம் தான் . நண்பர். வேறு பழக்கம் கிடையாது .

என்னுடைய பாலன் சிட் பண்ட்சில் தனியாக முகமது ஆரிப் வரவு செலவு வைத்துள்ளார். 15 வருடங்களாக அவ்வாறு வரவு செலவு வைத்துள்ளார் . 15 வருடங்களுக்கு முன்பு பணம் வாங்யிருப்பார் திரும்ப கொடுத்திருப்பார். அதன் பிறகு எந்தவிதமான பண பரிவர்தனைகள் கிடையாது . தற்பொழு ஏதாவது வரவேண்டிய பாக்கி உள்ளதா என்றால் மேனேஜரை தான் கேட்கவேண்டும் . பாலன் சிட் பண்ட் பதிவான கம்பெனி. பதிவேடுகள் சரியாக பரிமாரிக்கப்பட்டு வருகிறது. பாலன் சிட் பண்ட்ஸிற்கு தனியாக வருமான வரி செலுத்தி வருகிறோம். நான் என் சகோதரர் எல்லோரும் வருமான வரி துறைக்கு சரியான கணக்குகளை தான் காண்பிக்கிறோம் என்றால் ஆமாம் . நான் கணேஷ் பைனான்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன் . கணேஷ் பைனான்ஸிற்கும் வருமான வரி உள்ளது. அதிலும் சரியான கணக்குகளை தான் காண்பிக்கிறேன். சிட் பண்ட்ஸில் யார் யார் சீட் எடுத்தார்கள். எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது. பாக்கி எவ்வளவு என்ற விவரம் சரியான முறையில் வருமான வரி துறையிடம் தாக்கல் செய்கிறேன் . அதே போல் ரிஜிஸ்டிரார் சிட்ஸிடமும் தெரிவிப்பேன் . அவ்வாறு பைனான்சிலும் முறையான கணக்குகளை தாக்கல் செய்கிறேன். இவ்வாறு என் தம்பி இந்த ஒரு வழக்கு தான் போட்டிருக்கிறார் . நான் எத்தனை வழக்கு கம்பெனி சார்பாக போட்டிருக்கிறேன் என்று பார்க்க வேண்டும். சம்சாத் பேகம், முகமது ஆரிப் ஆகியோர் பெயரில் எங்கள் குடும்பத்தில் எத்தனை வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் என் தம்பிகளை தான் கேட்க வேண்டும் . நான் வரவு செலவு

கணக்குகள் சம்மந்தமாக வழக்குகள் எத்தனை யார் யார் மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்று பார்க்கவேண்டும். இந்த நீதிமன்றத்தில் சமிபத்தில் வழக்குகள் தாக்கல் செய்யவில்லை . எங்கள் குடும்பத்தில் நான் வழக்கு போட்டால் யாரையாவது பவர் போடுவேன். என் தம்பி வழக்கு போட்டால் அவர் யாரையாவது பவர் போடுவார் . அது போல தான் என் தம்பி எனக்கு பவர் கொடுத்திருக்கிறார் என்றால் அவர் உடல் நிலை சரியில்லாத போது எனக்கு பவர் கொடுத்தார். தற்போது நான்றாக உள்ளார். நான் இதே நீதிமன்றத்தில் சௌந்தரம் என்பவர் மீது முருகாந்தம் என்பவரை பவர் ஏஜெண்டாக போட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம் . அது அசல் வழக்கு 143/2018 என்றால் எனக்கு ஞாபகமில்லை . சௌந்தரம் மீது போடப்பட்ட வழக்கு கொடுக்கல் வாங்கல் வழக்கா என்றால் கம்பெனி மேனேஜரை தான் கேட்கவேண்டும். 143/2018 வழக்கில் 2015 ஆண்டு என்ற போடப்பட்டுள்ள பத்திரத்தை 2018 என்று வருடத்தை திருத்தி தாக்கல் செய்ததாக வழக்கு கடந்த 29/08/2024 இல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதை மேனேஜரிடம் தான் கேட்க வேண்டும். பாலன் சிட்ஸ் பண்டில் கொடுக்கின்ற தொகையை பொறுத்து ஆவணங்கள் வாங்குவோம் . கடன் கொடுக்கும் தொகைக்கு கடன் அடமானம் பத்திரம் (MOD) பதிவு செய்து வாங்குவோம் . அவ்வாறு எத்தனை பேரிடம் MOD வாங்கியுள்ளோம் என்று மேனேஜரை தான் கேட்க வேண்டும். அவ்வாறு எங்கள் கம்பெனியில் பதிவு செய்யப்பட்ட

MOD களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் பார்த்து தான் என்னால் சொல்ல முடியும்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.